# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, கருணா சமாதி ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஒற்றோபர் மாதம் 30 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, கருணா சமாதி ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச.வ.ஓ. (கூட்.) 5/2007

**கருணா சமாதி ஒழுங்கமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

முன்னுரை.

"கருணா சமாதி ஒழுங்கமைப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒழுங்கமைப்பொன்று அதன் உறுப்பினர் களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப் பட்ட ஒழுங்கமைப்புடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட ஒழுங்கமைப்பு எப்பல்வேறு குறிக் கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், கூட்டிணைக்கப்படுவதற்காக விண்ணப்பித்துள்ள தாதலாலும் அத்துடன் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, கருணா சமாதி ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

கருணா சமாதி ஒழுங்கமைப்பைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப் படும்) "கருணா சமாதி ஒழுங்கமைப்பின்" தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப் படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கருணா சமாதி ஒழுங்கமைப்பு" என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலா மென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

2-PL 004202 - 990 (2009/07)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) பொருளாதாரக் கஷ்டத்தை எதிர்நோக்குகின்ற இலங்கைப் பிரசைகளின் குடும்பங்களுக்கு அவர்களின் ஆன்மீக மற்றும் பொருளாதாரநிலையை மேம்படுத்துவதற்கு உதவுதல் ;

(ஆ) பொருளாதாரக் கஷ்டத்தை எதிர்நோக்குகின்ற திறமையுள்ள மாணவர்களின் கல்விக்கென மாதாந்த நிதி உதவியுடன்கூடிய புலமைப்பரிசில்களை வழங்குதல் ;

(இ) நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளில் தங்கியுள்ள, பொருளாதாரக் கஷ்டத்தை எதிர்நோக்குகின்ற நோயாளர்களுக்கு மருந்துகள், உணவு மற்றும் வேறு அத்தியாவசியமானவற்றை வழங்குதல், கர்ப்பிணித் தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் போசாக்கு உணவு, உடை போன்றவற்றை வழங்குதல் மற்றும் வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்களையும் வேறு சாதனங்களையும் வழங்குதல் ;

(ஈ) ஊனமுற்ற ஆட்களுக்கும் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கும் உதவி வழங்குதல் ;

(உ) இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழில்பயிற்சி, கல்விப் பாடநெறிகள் மற்றும் செயற்களங்கள் போன்றவற்றை நடாத்துதலும், ஆள்சார் மற்றும் நிதிசார் பாதுகாப்பைப் பெறுவதில் அவர்களுக்கு உதவிசெய்வதற்கென ஆலோசனைச் சேவைகளை ஏற்பாடுசெய்தலும்;

(ஊ) ஒன்றுசேர்ந்து வேலைசெய்யும் ஆர்வத்தை ஊக்குவிக்கும்பொருட்டு சிரமதானச்செய்பாடுகளை ஒழுங்குசெய்தல் ;

(எ) ஒழுங்கமைப்பின் சர்வதேசக் கிளைகளைத் தாபித்தலும் மற்றும் அவற்றைப் பேணிவருதலும் ; அத்துடன்

(ஏ) புத்தகங்கள், பருவ ஏடுகள், பத்திரிகைகள் மற்றும் மஞ்சரிகள் போன்றவற்றை அச்சிடுதல், வெளியிடுதல், விநியோகித்தல் ; அத்துடன் பொது அக்கறையுள்ள கருமங்களில் மாநாடுகளையும் செயற்களங்களையும் ஒழுங்குசெய்தல்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் நடைமுறைப்படுத்தப்படுதலானது இன, மத, மொழி, சாதி, பால் மற்றும் அரசியல் கருத்து அடிப்படையிலான வேறுபாடுகள் எதுவும் இன்றி சாத்தியப்படக்கூடியளவு அதிகளவில் நிறைவேற்றப்படுவதைக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க ஐந்து வருடங்கள்கொண்ட பதவிக்காலத்திற்குத் தெரிவுசெய்யப்படக்கூடியவாறான ஒரு பணிப்பாளர்நாயகம், தவிசாளர் மற்றும் நிதிநிருவாகி, ஒரு செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர், உதவிப் பொருளாளர் மற்றும் ஒரு திட்டப் பணிப்பாளர் மற்றும் வேறு உறுப்பினர்கள் அடங்கிய முகாமைச் சபை ஒன்றினால், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அமைவாக நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபையானது, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று பதவி வகித்த ஒழுங்கமைப்பின் முகாமைச்சபையாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அது, இச்சட்டத்திற்கான விதிகளின்கீழ் புதிய முகாமைச்சபையொன்று நியமிக்கப்படும் வரையில் பதவிவகித்தலும் வேண்டும்.

*சொத்துக்களைக் கொள்ளுதல், நிதிகளை முதலீடு செய்தல் மற்றும் கடன்பெறுதல் முதலிய வற்றுக்கான கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள்.*

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனமானது பின்வருவனவற்றைச் செய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் காணிகளை அத்துடன் கட்டிடங்களைக் கொள்வனை செய்வதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும், நிறுவுவதற்கும் அத்துடன் வேறுவகையில் பெறவும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக பணத்தைக் கடனாகப் பெறவும் அல்லது திரட்டவும் ;

(இ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் அத்துடன் வேறு கைமாற்றத்தகு சாதனங்களைத் தயாரிக்கவும், எழுதவும், கையேற்கவும், கழிவுகளை வழங்கவும், கொடுக்கல் வாங்கல் செய்யவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும், வழங்கவும் மற்றும் வங்கிக்கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும் முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளை முகாமைச்சபை பொருத்தமெனக் கருதும்வகையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) உதவுதொகைகள், சந்தா கட்டணங்கள், கொடைகள், நன்கொடைகள் மற்றும் எல்லாவகையிலுமான பரிசுகளைக் கோரவும் கையேற்கவும் ;

(ஊ) எவரேனும் ஆளுடன், கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களை செய்துகொள்ளவும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமனம்செய்யவும், வேலையில் ஈடுபடுத்தவும், பதவிநீக்கஞ் செய்யவும், அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், மற்றும் அவர்களுக்கு கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆளணியினரைப் பயிற்றுவிக்கவும் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறை யாகவும் பயனுறுதியாகவும் நடைமுறைப்படுத்த அவசியமான, இடைநேர்விளைவான அல்லது உசிதமானவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்யவும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மையைக் கொண்டு பின்வரும் கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினரின் ஒவ்வொரு வகுப்பினரும் செலுத்தவேண்டிய கட்டணங்கள் அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி விலகல் ;

(ஆ) முகாமைச்சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிநீங்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப் படுதல் அல்லது பதவியை வறிதாக்கல் அத்துடன் முகாமைச் சபையின் தத்துவங்கள், கடமைகள், நடத்தை என்பன ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் மற்றும் பணிகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் மற்றும் முகாமைச்சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலிலும், நடாத்துதலிலும், பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும் மற்றும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) முகாமைச்சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ; அத்துடன்

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தல் அத்துடன் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதல்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் விதியானது, உட்பிரிவு (1) இன்கீழ் விதியொன்று ஆக்கப் படுவதைப்போன்று, அது போன்ற கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும், திருத்தவும், மாற்றவும்படலாம் அல்லது அதற்கு ஏதேனுமொன்றைச் சேர்க்கலாம் அல்லது நீக்கஞ்செய்யப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண் டிருத்தல் வேண்டும் :-

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியமானது பின்வருவதனைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு நேர்முன்னரான நாளன்று ஒழுங்கமைப்பின் கணக்கில் வரவிலுள்ள எல்லாப் பணங்களும் ; அத்துடன்

(ஆ) கூட்டுத்தாபனத்துக்காகவும், கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை அல்லது கட்டணங்கள் மானியங்கள் என்றவகையில் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதியத்தின் வரவில் இருக்கின்ற எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய் வதிலும் அதன் குறிக்கோள்களை எய்துவதிலும் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம், மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத் தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஆண்டுக்கொருமுறை கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளரொருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அவரது அறிக்கை பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவில் “தகைமை பெற்ற கணக்காய்வாளர்” என்பது–

(அ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால், கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றார்களோ, அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் கூட்டங்கள்.*

**9**. ஏதேனும் நிதியாண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அவ்வாண்டை அடுத்துவரும் ஆண்டின் யூன் மாதத்தில் நடாத்தப்படுதல் வேண்டும். முழு உறுப்பினர்களின் நாலில் ஒரு பங்குக்கு மேற்பட்டோரின் எழுத்து மூலமான வேண்டுகோளின்மீது விசேட பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்படலாம். விசேட பொதுக்கூட்டத்தை நடாத்துவதற்கான முன்னம் பற்றிய அறிவித்தலானது, கூட்டம் எந்நாளில் நடைபெறவுள்ளதோ அந்நாளுக்குப் பதின்நான்கு நாட்களுக்கு முன்னர் உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படுதல் வேண்டும்.

*கலைக்கப்படுவதன்மேல் எஞ்சியுள்ள ஆதனம்.*

**10.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல், அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தன்மையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைகொண்டதும் அல்லது கொண்டவையும், அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையுமான வேறேதேனும் நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களிற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் கலைப்பின் போது அல்லது கலைப்பிற்கு நேர்முன்னர் அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் மற்றும் செயலாளர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் குழுவின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387 :* (வெளிநாடு) ரூபா *1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்